கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களம், வடமாகாணம்
සමුපකාර සංවර්ධන දෙපාර්තමේන්තුව උතුරු පළාත
DEPARTMENT OF CO-OPERATIVE DEVELOPMENT, NORTHERN PROVINCE
Kanniya Road, Varothaya Nagar, Trincomalee

Our Ref:- NP/15/MA/Gen-8 Your Ref:- 15 October 2008

சுற்றறிக்கை இல: 04/2008

சகல கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர்களுக்கும்,

## Co-op city சிறப்பு விற்பனை நிலைய ஊக்குவிப்பு தொடர்பான திட்டங்கள்

தங்கள் பிரிவில் செயற்பட்டுவரும் Co-op city சிறப்பு விற்பனை நிலைய செயற்பாடுகளை மேம்படுத்தும் நோக்கில் சிலதிட்டங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

1. அண்மையில் உள்ள மாவட்டங்களின் அல்லது பிரதேசங்களின் உள்ளூர் உற்பத்தி பொருட்களின் கொள்விலைகளைப் பெற்று தொகுத்த பின்பு அவற்றில் குறைந்த விலையையுடைய மாவட்டங்களில் பொருட்களை கொள்வனவு செய்யும் நடைமுறையை அமுலாக்குதல். (Co-op Network system)

2. இதன் மூலம் அவ்விரு மாவட்டங்களுக்குமிடையிலான ஒரு கூட்டுறவு வலையமைப்பபை ஏற்படுத்தி மக்களுக்கு சிறந்த சந்தைப்படுத்தலையும், மிகக்குறைந்த விலையில் பொருட்களையும் சேவைகளையும் வழங்குதல்.

3. இவ்வாறான வலையமைப்பு செவ்வனே இடம்பெற அம்மாவட்டங்களின் உதவி ஆணையாளர்களும் உரிய கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர்களும் விசேட கவனஞ் செலுத்துவதுடன் இச்செயற்பாட்டின் ஆரம்ப நடவடிக்கைகளில் முனைப்புடன் செயற்படுதல் வேண்டும்.

4. ஒவ்வொரு மாவட்டத்திலும் உள்ள உள்ளூர் பிரதேசங்களில் அல்லது இருமாவட்டங்களிலும் உள்ள ஏனைய Co-op city விற்பனை நிலையங்களுக்கு Co-op city விற்பனை நிலையத்திற்கு பொறுப்பானவர்களை அழைத்துச்சென்று பார்வையிடச்செய்து அவர்களுடைய தொழில் நுணுக்கங்களையும், விசேட இலாபமீட்டு நடைமுறைகளையும் பரிமாற்றுதல். ( Co-op Exchange Programme )

5. ப.நோ.கூ சங்கங்களுக்கு பொறுப்பான கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் தமது சங்கத்தின் கீழ் செயற்படும் Co-op city விற்பனை நிலையங்களை வாரம் ஒருமுறையாவது பார்வையிட்டு அவற்றில் பொருட்கள் வைக்கப்பட்டுள்ளமுறை, பொருட்களின் துப்பரவு, அவற்றின் ஒழுங்குபடுத்தல் ஆகியன தொடர்பாக வேண்டிய ஆலோசனைகளை வழங்குதல்.

6. மாவட்டரீதியாக ஒவ்வொரு Co-op city களுக்குமிடையில் சிறந்த Co-op city தெரிவிற்கான போட்டி முறைமையை உருவாக்கி வருடத்தில் சிறந்த Co-op city ஐ தெரிவு செய்து ஊக்கப்படுத்துதல்.

7. இவ்வாறு போட்டிக்கான விதிமுறைகளையும், நியதிகளையும் முன்னரே உரிய விற்பனை நிலையங்களுக்கு அறிவித்து அந்நிலையங்களை எந்நேரத்திலும் பார்வையிடுவதற்கென அலுவலகரீதியான இரகசிய குழுவொன்றை நியமித்தல்.

8. போட்டியின் போது தெரிவுசெய்யப்படும் Co-op city விற்பனை நிலையத்திற்கு மேலதிக வசதிகளை ஏற்படுத்திக்கொடுத்தல்.

☎-CCD & RCS – 060 2264646 Gen – 060 2264645 Fax – 026 2226951/4/6/7 – Ext - 244
E- mail :- ccdnp@mail.com

9. தெரிவு செய்யப்படும் Co-op city விற்பனை நிலையத்திற்கு பொறுப்பான கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தரையும் கௌரவித்தல்.

10. Co-op city விற்பனை நிலையத்தில் கடமைபுரியும் அலுவலர்களுக்கு புதிய ஊக்குவிப்புத்திட்டத்தினையும் அவர்களுக்கான Co-op sales promotion திட்டத்தினையும் அறிமுகப்படுத்தல். அதாவது குறித்த வருடத்தில் மேலதிக இலாபத்தினை ஈட்டிக்கொடுக்கும் அலுவலர்களுக்கு குறித்தளவிலான ஊக்குவிப்புக் கொடுப்பனவை இயக்குனர்சபை தீர்மானத்துடன் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளரின் அனுமதியுடன் வழங்குதல்.

11. அத்தியாவசிய காரணங்கள் தவிர சங்கங்கள் இதன் காரணமாக வெளியிலிருந்து புதிய பணியாளர்களை நியமனம் செய்வதைத் தவிர்க்க வேண்டும். அப்படிச்செய்வதாயின் உரிய ஆளணி அனுமதி பெறப்படல் வேண்டும். அதற்கான நியமங்கள் உருவாக்கப்படல் வேண்டும்.

12. எக்காரணம் கொண்டும் Co-op city நட்டத்தில் இயங்கினால் அதற்கு பொறுப்பான கூ.அ.உத்தியோகத்தரும் கூ.அ.உ.ஆணையாளரும் பொறுப்புக்கூற வேண்டி ஏற்படும் ஆனபடியால் சங்கத்தின் செயற்பாடுகளை கண்காணிப்பது மிகவும் அத்தியவசியமாகும் குறைகள் சுட்டிக்காட்டப்படல் வேண்டும். உடனுக்குடன் நிவர்த்தி செய்யப்படல் வேண்டும்.

13. Co-op city விற்பனை நிலையத்திலுள்ள பொருட்களின் விலை விபரங்களை பத்திரிகைகள் மூலமோ அல்லது துண்டுப்பிரசுரம் மூலமாகவோ மக்களைச் சென்றடையச் செய்து மக்கள் மத்தியில் நம்பிக்கையை ஏற்படுத்துதல். முடியாதவிடத்து விற்பனைநிலையத்தினை ஒழுங்காகக் காட்சிப்படுத்துதல்.

14. வாடிக்கையாளர்களை அதிகரிக்கும்முகமாக அரச அலுவலர்களுக்கு விசேட பிற்கொடுப்பனவுத்திட்டத்தினையும், அலுவலர்களுக்கான கடன் எல்லைகளையும் சம்பந்தப்பட்ட திணைக்களத்தலைவரின் சிபாரிசுடன் Co-op credit card system இனை அறிமுகப்படுத்த நடவடிக்கை எடுத்தல்.

15. தனியார் நிறுவனங்களுடன் போட்டியிடக்கூடிய வகையில் அனைத்து சிறப்பு விற்பனை நிலையங்களில் உள்ள பொருட்களின் சுத்தத்தினையும், அழகினையும் ஏற்படுத்தவும், விற்பனையை மேம்படுத்தக்கூடிய வகையிலும் ஊழியர்களுக்கான பயிற்சிகளை வகுத்தல்.

16. மாவட்டரீதியாக அனைத்து Co-op city அலுவலர்களுக்கும் ஒரேநிறத்திலும், ஒரே வடிவமைப்பிலும் அமைந்த Co-op uniform திட்டத்தினை நடைமுறைப்படுத்தல்.

17. Co-op city விற்பனை நிலையங்களில் மரக்கறி, பால் போன்ற விவசாய உற்பத்திகளையும் விற்பனைசெய்ய முயற்சிகள் மேற்கொள்ளல்.

18. சிறியளவிலான நடமாடும் (mobile) Co-op city களை உருவாக்க முயற்சியெடுத்தல்.

19. வாடிக்கையாளர் தாமே பொருட்களை எடுப்பதற்கும், தாமே விலைகளைப் பார்வையிடுவதற்கும் அவர்களின் இலகுவான நடமாட்டத்திற்கும் ஏதுவாக பொருட்களை ஒழுங்குபடுத்துவதில் கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் தனது முழுமையான பங்களிப்பினை வழங்குதல்.

20. வாடிக்கையாளர் தமது தேவைகளையும், குறைபாடுகளையும் தெரிவிக்கும் பொருட்டு ஒவ்வொரு Co-op city சிறப்பு விற்பனைநிலையம் முன்பாகவும் முறைப்பாட்டு பெட்டி ஒன்றை வைப்பதுடன் வாடிக்கையாளரினால் தெரிவிக்கப்படும் குறைபாடுகளை உடனுக்குடன் நிவர்த்தி செய்யப்படுதினை கூட்டுறவு அபிவிருத்தி அலுவலர் ஊடாக உறுதிப்படுத்தல்.

21. Co-op city சிறப்பு விற்பனைநிலையம், தொடர்பான முன்னேற்றத்திட்டங்களை வகுக்க உதவி ஆணையாளர் தலைமையில் குழு அமைத்து மாதாந்தம் தனியான கலந்துரையாடலை நடாத்தி புதிய முன்னேற்றத்திட்டங்களை வகுத்தல்.

22. Co-op city விற்பனைநிலையங்களின் செயற்பாடு தொடர்பான மாதாந்த முன்னேற்ற அறிக்கையினை கூட்டுறவு அபிவிருத்தி அலுவலர் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் ஊடாக எனக்கு அனுப்பிவைக்கப்படுவதுடன் இவ்வறிக்கை அங்கீகரிக்கப்பட்ட நியமங்கள் அடிப்படையிலான அறிக்கைகளாக சமர்ப்பிக்கப்படல் வேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

23. அரசாங்கத்தால் வழங்கப்பட்ட இச்சலுகைகளைக் கொண்டு கூட்டுறவு நிறுவனங்களை முன்னேற்ற முடியாவிட்டால் இது கூட்டுறவாளருக்குச் செய்யும் அநீதியாகும் என்பதனைக் கருத்தில் கொண்டு சங்கநிர்வாகமும் பணியாளரும் கூட்டுறவுத்திணைக்கள உத்தியோகத்தரும் தமது முழுமையான அர்ப்பணிப்புடன் சேவையாற்றவேண்டும்.

24. ஒவ்வொரு வாரமும் Co-op city க்கு பொறுப்பான உத்தியோகத்தர் இவ்விடயங்கள் தொடர்பான நிலைமைகளை ஆராய்ந்து கூ.அ.உ.ஆணையாளர்களுக்கு அறிக்கை சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

மேற்படி திட்டங்களை சகல ப.நோ.கூ.சங்கங்களின் முகாமைக்கும் தெளிவுபடுத்தி, Co-op city விற்பனை நிலையங்களை மேம்படுத்துவது தொடர்பான ஒருதுரித வேலைத்திட்டத்தினை தயாரித்து இயக்குனர்சபைக்கு சமர்ப்பித்து உரிய அனுமதி பெற்று எனக்கு அனுப்பிவைக்கப்படுவதுடன், மாதாந்தம் இவ்வேலைத்திட்ட முன்னேற்றம் தொடர்பாகவும் கூட்டுறவு அபிவிருத்தி அலுவலர் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் ஊடாக அறிக்கை சமர்ப்பித்தல் அவசியமானதாகும்.

o/c [signature]

ஆ.சுப்பிரமணியசர்மா

கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரும்

கூட்டுறவுச் சங்கப் பதிவாளரும் (வமா)